## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

**உதவி பதிவாளர் - 01 பதவி**

01. **வயதெல்லை** :விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கும் குறையாத 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)

02. **கல்வித் தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அ. பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித வள முகாமைத்துவம் / வணிகம் /அரச நிருவாகம்/ அரச முகாமைத்துவம் / முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** (கீழே 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1) சேவைக்குரிய இரண்டாவது தரத்திற்கு உட்பட்ட துறையில் பதவி ஒன்றில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் மகிழ்ச்சியானதொரு சேவையை நிறைவு செய்திருத்தல்.

ஆ. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்**

| | |
|---|---|
| உரிய அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய செயற்பாடுகள் /திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

இ. சம்பள அளவுத்திட்டம் : JM1-1 : ரூ. (42,600-10x755-18x1,135- ரூபா 70,580)

**பதவி : ஆங்கிலபோதனாசிரியர் (பதவி 01)**

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

02. **கல்வித் தகைமை** : வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டஆங்கில மொழியை கற்பித்தல் தொடர்பான இளமாணிப் பட்டம் /ஆங்கிலம் தொடர்பான பட்டம்

அல்லது

ஆ. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசியதொழில்சார் தகைமை (NVQ) ஆறாம் (06) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரச,அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரியதுறையில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

இ. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்தாம் (05) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினைபெற்ற பின்னர் அரச,அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

03. **நேர்காணலில் புள்ளிவழங்கும் முறை**

| | |
|---|---|
| உரிய அனுபவம் | 30 புள்ளிகள் |
| உரிய கல்வித் தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய செயலாற்றுகை திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் செயலாற்றுகை | 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | **100 புள்ளிகள்** |

04. **சம்பள அளவுத்திட்டம்** : MA 4 - ரூபா (37,970 – 10 x755 – 15 x 930 – 5 x 1,135 – ரூபா 65,145)

**அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**

1. பதவி நிரந்தரமானது.
2. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யப்படும்.
3. மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.
4. 2019.09.12 ஆந் திகதியையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: ரண்ண நிலையம் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கான வெற்றிடங்கள் சீதுவை பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் அந்நிலையங்களில் கடமையாற்ற வேண்டும்.

**சேவை நிபந்தனை :** 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**இணைத்துக்கொள்ளும் முறை :** நியமன அதிகாரியின் பணிப்பின் பேரில் நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடாத்தப்படும். அதிக புள்ளிகளை பெற்றவர்களுள் திறமை அடிப்படையில் தெரிவு நடைபெறும்

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2025.02.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

சிரேஷ்ட பேராசிரியர் வசந்தாசுபசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம் (ப.க.),
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை,
2025, பெப்புருவரி 05.

02-83